ஸ்ரீ திரிபுரஸுந்தரீஸமேத சந்திரமௌளீசுவராய நம:.

ஆர்ய தர்மம்.

नित्यं दुष्पथकर्षणा दरभृतो राज्ञः कलेश्शासनं
त्यक्त्वा पापदकृत्यमात्ररुचिदं द्रव्यं निजाधीनताम् ।
नीत्वा शास्त्रपथे चरन्ति धनिनो ये सन्ततं श्रद्धया
तन्वन्तीह न कस्य कौतुकभरं ते श्लाघ्यवृत्तोज्ज्वलाः ॥

उपपत्राधिप:.

எப்பொழுதும் கெட்டவழிகளில் ஜனங்களை இழுக்க வேண்டுமென்று கங்கணம்பூண்ட கலியரசனுடைய ஆக்ஞையை அநுஷ்டிக்காமல்விட்டுவிட்டு பாபத்திற்குக் காரணமான கெட்ட காரியங்களைச் செய்யவேண்டுமென்று ஆசையை யுண்டுபண்ணும் தனத்தைத் தனக்கு ஸ்வாதீனமாய் செய்துகொண்டு எந்த செல்வவந்தர்கள் சாஸ்திரங்களில் கூறப்பட்ட விதிவழுவாமல் எக்காலமும் அதிக சிரத்தையுடன் ஸத்கர்மானுஷ்டானங்களை செய்கின்றார்களோ சகல ஜனங்களாலும் புகழக்கூடிய நன்னடத்தையையுடைய அந்த தனிகர்கள் யாருக்குத்தான் அதிக சந்தோஷத்தை யுண்டு பண்ணவில்லை.

ஒருவனுக்கு முன்ஜன்மத்தில் செய்யப்பட்ட புண்யவசத்தால் பொருள் கிடைத்தால் அதை எவ்விதம் உபயோகப்படுத்த வேண்டுமென்று அறியாமல் தோன்றியவாறு கெட்டவழிகளில் செலவிட்டு பாபத்திற்குள்ளானுல் அவனைப் பார்ப்போர்கள் இவ்விதம் செய்யவேண்டுமா? என்று மனவருத்தப்படுவார்கள். அவ்விதமின்றி சாஸ்திரங்களாலும் பெரியோர்களாலும் போற்றக்கூடிய நல்வழிகளில் அந்தப் பொருளைச் செலவிட்டு மற்றுமுள்ள தனவான்களுக்கும் பொருளின் உபயோகம் இவ்விதமென்று தான் அனுஷ்டித்துக்காட்டி உபதேசிப்பவன்போல் விளங்கும் சிறந்த குணம் பொருந்திய ஒருவனைக்கண்டால் சந்தோஷத்தையடையாமல் எப்படி இருக்கமுடியும்? இதினுல் பொருளையடைந்தவர்கள் நல்வழிகளில் செலவிட்டு சிரேயஸ்ஸை அடையவேணுமென்று தெரிவிக்கப்படுகிறது.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வேதாந்தஸாரம்.

(164-வது பக்கத்தொடர்ச்சி)

சம்பந்தமென்பது சாஸ்திர மரியாதையைக் குறித்துக் கூறப்படுகின்றது.

अयमधिकारी जननमरणादिसंसारानलसंतप्तः दीप्तशिरा जलराशिमिवउपहारपाणिः श्रोत्रियंब्रह्मनिष्ठं गुरुमुपसृत्य तमनुसरति।

இங்கு நிரூபிக்கப்பட்ட ஸாதனங்களைப்பெற்ற அதிகாரியானவன் ஜனனம், மரணம் முதலான ஸம்ஸாராக்கினியால் மிகவும் தகிக்கப் பட்டவனுய்க் கோடைக்காலத்து வெயிலால் தாபத்தை யடைந் தவன் ஜலத்தைத் தேடுவதுபோல் பெரியோர்களின் தரிசனத்திற் கருகமான ஸமித்து, தர்ப்பை இவைகளைக் கையிலெடுத்துக் கொண்டு வேதசாஸ்திரங்களை நன்கறிந்தவராயும், பிர்மஸ்வரூபத் தில் பற்றுதலுள்ளவருமான குருவை முறைப்படி அடைந்து, அவரை அனுசரித்திருப்பான். சுரிதியிலும் இவ்விதமே குருவை அடையவேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கின்றது.

இவ்விதம் தம்மையடைந்த சீடனுக்குக் குருவானவர் பரம கருணையுடன் அத்யாரோபாபவாத நியாயத்தால் உபதேசிக்கின் ருர். அதிகாரியான சிஷ்யன் விதிப்படித் தம்மையடைந்தால் வித்வானுன குருவானவர் அவனுக்குஉபதேசிக்க வேண்டுமென்று சுருதியும் கூறுகின்றது. அத்யாரோபாபவாத நியாயமென்று கூறியிருப்பதில் அத்யாரோபமென்ருல் என்னவென்பதை முந்தி அறிவிக்கிருர்.

असर्पभूते रज्जौ सर्पारोपवत् वस्तुन्यवस्त्वारोपोऽध्यारोपः।

பாம்புபோல் தோன்றும் கயிற்றில் பாம்பென்கிற ஆரோபம் ஏற்

படுவதுபோல் வஸ்துவில் அவஸ்துவின் ஆரோபமேற்படுகின்றது இதற்கு அத்யாரோபமென்று பெயர். ஸத்தாயும், சித்தாயும், ஆனந்தரூபமாயும், அனந்தமாயும், ஒன்ருயும் விளங்கும் பிர்மமே வஸ்து. அக்ஞானம் முதலான ஸகலமான ஜடஸமூகங்களும் அவஸ்துவாகும். இங்கு கூறப்பட்ட அக்ஞானத்தை ஸத்தாயும் கருதமுடியாது; அஸத்தாயும் சொல்ல வியலாது. ஸத்தென்று சொன்னுல் நிவிருத்தியேற்படாது. சாஸ்திரங்களில் பல இடங்களில் ஞானத்தால் அக்ஞானத்திற்கு நாசமேற்படுமென்று கூறியது தவருகும். முயற்கொம்பு, மலடிமகன், முதலியவைகளைப் போல் அத்தியந்தம் அஸத்தாயும் கூறமுடியாது. நான் அக்ஞன் என்று சகல ஜனங்களுக்கும் ஏற்படும் பிரத்தியக்ஷானுபவத்திற்கு விரோதமாகும். ஆகையால் **सदसद्भ्यामनिर्वचनीयं** ஸத்தென்ருவது அல்லது அஸத்தென்ருவது நிர்ணயிக்கமுடியாததாயும், ஸத்வம், ராஜஸ், தமஸ் என்கிற குணத்ரயரூபமாயும் ஞானத்திற்கு விரோதியாயும் பாவரூபமாயுமுள்ள ஏதோ ஒன்று என்று சொல்லுகிருர்கள்.

இந்த அக்ஞானமானது பலவா? ஒன்ரு? பலவாக அங்கீகரித்தால் "அஜாம் ஏகாம்" என்கிற சுருதி ஒன்ருகக்கூறுகிறபடியால் அதற்கு விரோதமாகும். ஒன்றுதானென்று கூறுவோமாகில் "இந்திரோ மாயாபி:" என்கிற சுருதியில் அநேகமாகச் சொல்லியிருப்பதற்கு விரோதமாகும். இவ்விரண்டு சுருதிகளையும் அனுஸரித்து ஸமஷ்டி, வியஷ்டி என்கிற அபிப்பிராயத்தால் இந்த அக்ஞானம் பலவாகவும், ஒன்ருகவும் கருதப்படுகின்றது. எங்ஙனம் பல்லாயிரம் மரங்களிருக்கின்றன வென்றறிவிக்கவேண்டித் தனித் தனியாகப் பார்த்தால் அநேக விருக்ஷங்களிருந்தாலும், எல்லாவற்றையும் சேர்த்தால் கூட்டம் ஒன்றுதான் எனக்கருதி வனம் என்று ஒருமையாகச் சொல்லப்படுகின்றதோ எங்ஙனம் எவ்வளவோ ஜலங்களுக்கிருப்பிடமான சமுத்திரத்தை ஜலக்கூட்டம்ஒன்றென நினைத்து கடல் என்று ஏகவசநாந்தமாகக் கூறப்படுகின்றதோ, அவ்விதம் பலவாருகத் தோன்றுகிற ஜீவனிடத்திலுள்ள அநேக அக்ஞானங்களையும் கூட்டம் ஒன்றெனவெண்ணி "அஜாம் ஏகாம்" என்று ஏகவசனந்தமாக சுருதி கூறுகின்றது.

इयं समष्टिरुत्कृष्टोपाधितया विशुद्धसत्वप्रधाना ।

இங்கு நிரூபிக்கப்பட்ட **समष्टि** ஸமுதாய ரூபமான அக்ஞானமானது சிரேஷ்டமான சைதன்யத்தை உபாதியாக அடைந்திருப்பதால் (எதானது தனக்கு வேறான ஒன்றின் தர்மத்தைத் தன்வாயிலாகப் பிரகாசப்படுத்துகின்றதோ, அது வேறான அந்த வஸ்துவிற்குப் பாதியாகும்) மிகவும் சுத்தமான ஸத்வகுணத்தைப் பிரதானமாக உடையதாகும். இவ்வித சுத்தஸத்வப் பிரதானமான ஸமஷ்டி அக்ஞானத்தோடுகூடிய சைதன்யமானது ஸர்வக்ஞத்வம், ஸர்வேசுவரத்வம், ஸர்வநியந்திருத்வம் முதலான குணங்களையுடையதாயும், அவ்யக்தமாயும், அந்தர்யாமியாயும், ஜகத்காரணமாயுமான ஈசுவரனென்று சொல்லப்படுகின்றது. இதுவே ஸர்வ அக்ஞானங்களுக்கும் அவபாஸகமாகின்றது. இந்த ஈசுவரனையே சுருதியிலும், பொதுவாகவும், விசேஷமாகவும், சகல விஷயங்களையும் நன்கறிந்தவர் என்று கூறப்பட்டிருக்கின்றது. இந்த ஸமஷ்டி அக்ஞானம் சகல காரியங்களுக்கும் காரணமாயிருப்பதால் ஈசுவரனுக்குக் காரணசரீரமாகிறது. அதிக ஆனந்தமிருப்பதாலும், கோசத்தைப்போல் மூடிக்கொண்டிருப்பதாலும் ஆனந்தமயகோசம் என்று வியவகரிக்கப்படுகின்றது. ஸர்வப்பிரபஞ்சங்களிலிருந்து நிவிருத்தியடைந்திருக்கும் இதன் அவஸ்தை ஸுஷுப்தியாகும். ஆகையால் சுருதியில் ஸ்தூல, சூக்ஷ்ம லயஸ்தானம் இந்த அவஸ்தை என்று வெளியிடப்பட்டிருக்கின்றது.

இவ்விதமே,

अव्यक्तमेतत्त्रिगुणैर्निरुक्तं तत्कारणं नाम शरीरमात्मनः ।
सुषुप्तिरेतस्य विभक्त्यवस्था प्रलीनसर्वेन्द्रियबुद्धिवृत्तिः ॥

ஸத்வம், ரஜஸ், தமஸ் என்கிற மூன்று குணங்களுடன் கூடிய இந்த அக்ஞானமானது ஆன்மாவுக்குக் காரணசரீரமாகின்றது தனக்குள் மறைந்த சகல ஸ்தூலப்பிரபஞ்சம், ஸூக்ஷ்மப்பிரபஞ்சம் இவைகளை உடையதாய்ப் பிரிந்து வேறாயிருக்கும் இதன் அவஸ்தை ஸுஷுப்தி அவஸ்தையென்று சொல்லபபடுகின்றது.

(தொடரும்)

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

ஹிந்துமததர்மம்.

3-வது பிரகரணம்.

பிராமணர்களுக்கு புண்ட்ரம் முக்கியம்.

(159-வது பக்கத்தொடர்ச்சி)

சிகையைப்பற்றி நாம் வெகு தூரம் சொல்லிவிட்டது போதும். அங்கிருந்து சற்றுக் கீழிறங்கி நெற்றியைப்பற்றினமட்டில் புண்ட்ரத்தைக்குறித்துச் சற்றுப் பேசுவோம். இந்த ஸமயத்தில் என்னுடைய வேறொரு பிராமணசிநேகிதருடையசெயல் எனக்கு ஞாபகத்திற்கு வருகின்றது. அவர் என்னை எப்போது கண்டாலும் பிராம்மணுளின் நிலைமையைத் திருத்தி அபிவிர்த்தி செய்ய வேண்டுமென்பதில் மிகவும் அக்கரையாய்ச் சொல்லிவருவார். ஆனுல் அவரோ தமது நெற்றியில் புண்ட்ரம் தரிக்கிறதில்லை. அந்த வழக்கத்தை அவர் விட்டு அனேகவருஷங்களாயின. அவர் புண்ட்ரம் தரிப்பதெல்லாம் வெறும் வேஷமென்றும், கர்மா உபாஸனைக் கிரியைகளில் புண்ட்ரம்தரிக்கவேண்டுமென்பது கட்டாயமில்லையென்றும் வாதிப்பார். அப்படிப்பட்ட கிரியைகளைக்கூட அவர் நடுவில் விட்டிருந்து, மறுபடி நூதனமாய்க் கைக்கொண்டவரென்று தெரிகிறது. இந்தப் புத்தியையும், எண்ணத்தையும் அவர் எங்கிருந்து கைக்கொண்டாரோ ஸ்வாமிக்குத்தான் தெரியும். அவருக்கு குரு அவரே தானென்றும், அப்படிப்பட்ட கொள்கை அவருக்கு அவரிடத்திலேயிருந்தே உதயமாயிற்றென்றும் பார்த்தாலே தோன்றுகிறது. கர்மம், உபாஸனு இவைகளைச் செய்யச்சொல்லி எந்த சாஸ்திரங்கள் விதிக்கின்றனவோ, அந்த சாஸ்திரங்களே ஷை தர்மக் கிரியைகளைச் செய்ய அவச்யமாய் வேண்டிய அங்கம் புண்ட்ரம்தரிப்பதே யென்றும், அந்த அங்கமில்லாவிட்டால் கிரியை நிஷ்பிரயோஜனமாய்விடுமென்றும் விதிக்கின்றன வென்பதை அவர் படித்துப் பார்த்துத் தெரிந்து கொள்ளவில்லை போலும்! சில கர்மங்களுக்கு முக்கியமாய்ப் பிரேத பிதுர்க்கள் விஷயத்தைப்பற்றின மட்டில் புண்டரம் தரித்

துக்கொள்ளக்கூடாது என்று தடுக்கப்பட்டிருக்கிறது. புண்டரம் தரிக்காதவனை அவனுடைய உறவினர்கள் கண்டால் மனதில் திகிலுண்டாகி என்ன விசேஷம்; நெற்றியில் ஒன்றையும் காணோமேயென்று உடனே கேட்கிறார்கள் அல்லவா? ஆகையால் புண்டரம் தரிப்பதானது வெறும் அர்த்தமில்லாத வேஷமென்பது பிசகு. மதவிஷயமான கிரியைகளுக்குத் தக்கபடி புண்டரம் தரிப்பதும் அல்லது புண்டரம் தரிக்காதிருப்பதும் அவசியமான நிபந்தனைகளாக விதிக்கப்பட்டிருக்கின்றன. அப்படி அவசியத்தை நம்பாவிட்டாலும் புண்டரம் தரிப்பது மேலுக்கு வேஷத்திற்கு என்றுதான் நினைத்துக்கொண்டே யோஜிப்போம். வேஷமே குடிகொண்ட இந்த உலகத்தில் வேஷத்தை அநுசரியாமல் எப்படி நாம் காலந்தள்ளக்கூடும்? வேஷமும் சில சமயங்களில் உபயோகத்திற்கு வேண்டித்தானிருக்கிறது. மற்ற வேஷங்கள் உதவுவதுபோல் தன்னைப்பற்றினமட்டில் புண்டரமும், தன்னைத்தரிப்பவனுக்கும் மற்றவருக்கும் சில லாபத்தை விளைக்காமல் போகவில்லை. சிகையைப்பற்றிச் சுருக்கிச் சொன்னதுபோலவே புண்டரத்தினுடைய விஷயத்தைப்பற்றியும் அதிகமாய் மதசம்பந்தமான கருத்தை உள்நுழைந்து வர்ணிக்காமல் வெளிப்பார்வைக்கு விசதமாகும் சாதாரண அம்சத்தைப்பற்றினமட்டில் நான் சுருக்கிச் சொல்லுகிறேன். உள்நுழைந்து பார்த்தால் புண்டரத்தில் திருபுண்டரம், ஊர்தவபுண்டரம், உத்தூளனம் முதலிய பலவகைகளுண்டு. அவைகளை விவரிப்பது இங்கே அநுவசியம்.

(2) நம்முடைய மதத்திற்கு விசேஷமாய் ஏற்பட்ட யோக்கியதை என்னவெனில் அது ஜனங்களுடைய பற்பல வேற்றுமையுள்ள பூர்வநிலை, குணம் இவைகளுக்குத் தகுந்தவாறு அவரவர்களின் ஆத்ம உன்னதியைக் கைதூக்கிவிடும்படியான பற்பல கர்மாங்கங்களைக் காட்டிக்கொடுத்திருப்பதுவும், அவரவர்களுடைய பக்தியின்சார்வில் அவரவர்களின் அபிவிருத்தியின் பக்வத்திற்கேற்ப உபாஸனைக்காகப் பற்பல தேவதாபக்தியைக் காட்டிக்கொடுத்திருப்பதுவுமேயாகும். தியானமானது கட்டுப்பட்ட மனத்தின் மூலகமாய் ஆகவேண்டியது அவசியமாயிருப்பதால்

அந்த மனத்திற்கு எட்டக்கூடியபடி ஒரு நிர்ணயமான ரூபத்தை பக்திக்குப் பாத்திரமான குறியாய் வைத்துக்கொள்ளவேண்டி யிருக்கிறது. பக்தியின் முடிவான பலனானது பக்தனுடையவும் பரபிர்மத்தினுடையவும் ஏகிபாவத்தேர்ச்சியாகிய ஸாயுஜ்ய பத வியேயாகையால், அதற்கடுத்தபடியான ஸாரூப்ய முக்தியைச் சீக்கிரத்தில் சாதித்துக்கொள்ளத் தனது தியானத்திற்குப் பாத் திரமான தேவதைக்கு அறிகுறியான அடையாளத்தைத் தனது தேகத்தில் தரித்துக்கொள்வது அவசியமாகிறது. தன்னுடைய பூர்வ ஜன்மங்களிலுள்ள மனநிலைப் பக்குவமானது சிவபக்தியை அல்லது விஷ்ணு பக்தியை அந்தரங்கத்தில் விதைத்திருக்கிறபடி யால் அதையொட்டியே ஒவ்வொரு மனிதனும் இந்தஜன்மத்தில் சிவபக்த குடும்பத்திலோ அல்லது விஷ்ணுபக்த குடும்பத்திலோ ஜனனத்தை அடைந்திருக்கிறான். ஆகையால் அவனவனுடைய குடும்ப பூர்வாசாரமானது திருபுண்டரத்தையோ அல்லது ஊர்த்வ புண்டரத்தையோ தரிக்கும்படி விதித்திருக்கிறது. அளவில்லா நீதி, கிருபை, அன்பு இவற்றோடுகூடின ஈச்வரன் ஒவ்வொரு அரிய ஹிந்துவிற்கும் தனது பிதுர்குலத்தையும், அக்குடும்பத்தில் வழங்கும் புண்டரத்தையும் ஏற்படுத்தியிருப்பதைக் கொண்டே அவனுடைய அபிவிருத்தியைச் சாதித்துக்கொள்ள அவன் எந்த வழியான பக்தியைக் கைப்பிடிக்கவேண்டுமென்று தெளிவாய்க் காட்டிக்கொடுத்திருக்கிறார். தனக்கு இஷ்டமான புண்டரத்தை தரிக்க அவனுக்கிடம் கொடுக்கவில்லை. தனது குடும்பத்துக்கேற் பட்ட புண்டரத்தைக் கைவிட்டு எப்போதும் பாழ்நெற்றியோ டிருக்கவும் அவனுக்கனுமதியில்லை. அவன் செய்யும் ஒவ்வொரு கர்மத்திலும் உபாஸனையிலும் மற்றச் சாதாரண சந்தர்ப்பங்களி லும் தனக்கேற்பட்ட புண்டரத்தை அவன் கட்டாயம் தரித்திரு க்கவேண்டும். அப்படிச் செய்வதால்தான் தனது தேவதையின் குறியைத் தனது தேகத்தில் அணிந்திருப்பதுடன் தனக்கேற் பட்ட கர்மமார்க்க பக்திக்கேற்றபடி விதிக்கப்பட்டிருக்கும் கிரி யைகளைத் தான் செய்துவரவேண்டுமென்று தனக்கு அடிக்கடி ஞாபகம் வந்துகொண்டிருக்கும். இதுவுமல்லாமல் அவனை மற்ற வர்கள் பார்த்தமாத்திரத்திலேயே அவன் இன்னவிதமான மனப்

பக்குவமுடையவனென்று சுளுவில் தெரிந்துகொள்ளப்படுவான். அப்படித் தெரிவதினுல் அனுவசியமாயும், புத்திபூர்வமில்லாமலும் ஒருவருக்கொருவர் நேரிடக்கூடிய மனஸ்தாபமும் விலக்கப்படலாகும்.

(3) நம்முடைய பெரிய மதத்திற்கேற்பட்ட இன்னெரு சிரேஷ்டமான பெருமை யென்னவென்ருல், அது மனித ஜன்மத்திற்குரிய புத்திக்கூர்மையினுடையவும், ஆத்மஞான அபிவிருத்தியினுடையவுமான பற்பல தாரணைகளுக்கேற்ற பிரகாரம் பற்பல வேற்றுமையுள்ள உபாஸனைகளை விதித்திருப்பதுமல்லாமல், எல்லாக் கொள்கைகளும் ஏகபரமாத்ம பாவனையையே சேருகின்றன என்ற முடிவான ஞானமானது குழப்பமும் தகாரும் உண்டாகாதபடி சுருதியில் படித்துப்படித்து வற்புறுத்தப்பட்டிருக்கிறது. அனுபோகஞானம் நிறைந்த மஹா ரிஷியாகிய ஸ்ரீ வேதவியாஸர் அநேக உபநிஷத்துக்களில் கண்டபிரகாரம் சுருதியின் வழிகளைப் பின்ருெடர்ந்தே எல்லா ஆரிய பக்தர்களையும் ஆத்ம உன்னதிபெற்று உய்விக்குமாறு அநேக புராணங்களை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிருர். அந்தப் புராணங்களுள் சிலவற்றில் சிவனுக்குப் பிராதான்யமும், மற்றப் புராணங்களில் விஷ்ணுவிற்குப் பிராதான்யமும் கொடுத்திருந்தாலும் ஒரு கொள்கையுள்ள பக்தனுக்கும் மற்ருெரு கொள்கையுள்ள பக்தனுக்கும் மனஸ்தாபமும் அவமரியாதையும் உண்டாகாவண்ணம் காப்பாற்ற எவ்வளவு பலம் கட்டவேண்டுமோ அவ்வளவு ஆதாவுகளையும் மேற்கண்ட இரண்டுவித புராணங்களிலும் எடுத்துக்காட்டியிருக்கிருர். இந்த மர்மம் சைவபுராணத்தில் விஷ்ணுவை சிவபக்தர்களுக்குள் முதன்மையாயும், விஷ்ணுபுராணத்தில் சிவனை விஷ்ணுபக்தர்களுக்குள் முதன்மையாயும் சொல்லப்பட்டிருக்கிறதினுல் தெரியும். ஷை இரண்டுவகைப் புராணங்களையும் நிஷ்பக்ஷபாதமாய்ப் படித்தால் சிவபக்தர் விஷ்ணுபக்தர்களுக்குள் ஒருவிதசச்சரவும், விவாதமும் ஏற்பட இடமிராது. எல்லாப் புராணங்களும் பரபிர்மம். ரூபமில்லாத நிர்குணம் என்ற பெரிய உண்மையை வியக்தமாய் ஒப்

புக்கொள்ளுகின்றன. நிற்குணம் என்ற பதத்தின் சாதாரணமான தும், ஊகத்திற்கெட்டினதுமான அர்த்தம் எப்படியிருந்தாலும் சரி. உண்மையில் ரூபமில்லாத பாவஸ்துவிற்கு ரூபமுள்ள தென்றி யிருப்பதாய்ப் பாவனை செய்வதினுலொழிய அந்த மூர்த்தி திரு புண்டாம் தரித்தவரா அல்லது ஊர்த்வபுண்டரம் தரித்தவரா என்ற விவாதம் கிளம்பமாட்டாது. நீங்கள் சிவபக்தனுயிருந்தா லும் சரி, விஷ்ணுபக்தனுயிருந்தாலும்சரி உங்களுடைய உபாஸ்ய தேவதையினுலேயே மற்றொருதேவதையானது உங்களைச்சேர்ந்த பக்தகோடிக்குள்ளே மிக சிரேஷ்டனுன பக்தனென்றுவது ஒப் புக்கொள்ளப்படாமல் தீராது. எப்படி என்றல் தனது தேகமெங் கும் ஊர்த்வபுண்டரம் தரித்த ஒரு விஷ்ணுபக்தன் திருபுண்டாம் அல்லது பஸ்மோத்துளனம் தரித்த ஒருசிவபக்தனை எதிரில்கண் டால் அவனுடைய கடமையானது “எதிரிலிருப்பவர் விஷ்ணுபக் தர்களில் முக்கியமான சிவனுடைய மார்க்கஸ்தர்” எண்றெண்ணி அவனுக்கு மரியாதை செய்யவேண்டிய தென்பதுவேயாகும். இப்படிக்குச் சந்திப்பவர்கள் புண்டாம் தரித்திருந்தால்தான் பலான தேவதாபக்தனென்று ஒருவருக்கொருவர் அறிந்துகொள் ளச் சாத்தியமாகும். ஒரு வைஷ்ணவன் சைவனைக்கண்டால் சிவ னைப் பற்றியாவது சிவபக்தனைப்பற்றியாவது ஒருவித இழிவும் சொல்லக்கூடாது. தான் வேண்டுமானுல் வைஷ்ணவகோஷ்டியி லிருக்கும்போது மற்ற மூர்த்தியைவிடத் தன்னிஷ்டதேவதை யைச் சிலாகித்துக்கொள்ளட்டும். அப்படிச் செய்வது சிவபக்த னைப் பழிப்பதற்காகவல்ல, தன்னைச் சேர்ந்தவர்களுக்கு விஷ்ணு பக்தியை அசையாமல் அதிக உறுதிசெய்யவேண்டியதற்காகவே யாம். இப்பேர்ப்பட்ட உத்தமகுணமும் பெருமையும் எல்லா மூர்த்திகளும் ஒன்றேயென்ற அபேதபாவனையும் ஒருவருக்கொரு வர் மரியாதையும் அன்பும் அவரவர்கள் தரித்துக்கொள்ளும் புண் டாமாகிய அடையாளத்தினுலேயேயல்லவா ஜனிக்கின்றன?

(4) ஆகையினுல் புண்டாம் தரிப்பதானது மேன்பார்வை யாய் யோஜிக்கும்போதுகூட வெறும் வேஷமென்று சொல்லப் படுவது பிசகாகும். அஃது எந்த வெவ்வேறு சம்பிரதாயத்தைச்

சேர்ந்த பக்தர்களானாலும் சரி அவர்களுள் அன்யோன்ய அன்பிற்கும் நல்லெண்ணத்திற்கும் பொதுவான மரியாதைக்கும் அரிகுறியாய் விளங்குகிறது. ஆகையால் அதின் முக்கியமானகருத்து எல்லோர்களுக்குள்ளும் சமாதானத்தை நிலைநாட்டவேயொழிய இக்காலத்தில் சிலகவிகள் தெரியாமல் தப்பபிப்பிராயம்கொள்ளுகிற பிரகாரம் ஒன்றுமில்லாத விஷயத்திற்கு முட்டாள்தனச் சச்சரவு செய்துகொள்ள ஆஸ்பதமானதல்ல. இன்னும் என்னென்ன முக்கியமான தர்மநோக்கங்கள் புண்டரத்தினால் சாதிக்கப்படுகின்றன என்பதையும், புண்டரம் தரிக்கும்போது அதற்கேற்பட்ட வைதிகமந்திர உச்சாரணையோடு தரிக்கும்பக்ஷத்தில் அதினால் என்னென்ன பெரியமனச் சக்திகளும் பலன்களுமுண்டாகின்றனவென்பதையும், எவ்வளவு தத்வஞான அரிகுறிகள் அதிலடங்கியிருக்கின்றன என்பதையும் நாம் மாத்திரம் சாஸ்திரங்களால் வெளியாகிய பிரகாரம் சரியாய்க்கண்டறியும்பக்ஷத்தில், பிராம்மண சரீரங்கள் எடுத்திருந்தும் நவீன ஆசார சீர்திருத்தப்பயித்தியம்பிடித்து உளருகிறவர்கள் எவ்வளவு தாழ்ந்தஸ்திதிக்குநழுவி விட்டார்களென்ற சங்கதி நமக்கு வியக்தமாய்த் தெரியவரும். புண்டரம்தரிக்கும் விஷயத்தைப்பற்றி இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கடைசியாய்ச்சொல்லும் வார்த்தை யென்னவெனில் நீங்கள் உங்களுடைய குடும்பத்திய நீடித்த அனுஷ்டான புண்டரத்தைக் கைவிடாதேயுங்கள். உங்களுடைய இஷ்டப்பிரகாரம் தோன்றினபடி அதைமாற்றவும் உங்களுக்குச் சுவாதீனமில்லை. உங்களுடைய சொந்தப் புண்டரமே உங்களுக்கு முதல்தரமென்று எண்ணுங்கள். உங்களுடைய சொந்த புண்டரத்தினுடைய அரிகுறியின் முக்கியத்தை நீங்கள் இப்போது அறியக்கூடாவிட்டாலும் உங்களுடைய பெரியவர்களிடம் சரியாய் விசாரிக்கச் சிரமமெடுத்துக்கொள்ளும் பக்ஷத்தில் நீங்கள் அதன் முக்கியத்தை நிச்சயமாய்த் தெரிந்துகொள்வீர்கள். ஆனால் உங்களில் யாராவது உண்மையான ஹிந்துவாகயிருந்துவர இஷ்டமில்லாதவராயிருந்தால் அப்பேர்ப்பட்டவர்கள் புண்ட்ரதாரணையை அடியோடே விட்டு

விடுவதில் ஆக்ஷேபணையேயில்லை. இன்னும் பார்க்கப்போனால் அப்படிப்பட்டவர்கள் தாமதம் செய்யாமல் புண்டரதத்தை உடனே விட்டுவிடுவது உத்தமம். ஏனென்றால் அவர்கள் அப்படி விடாமல் மேலுக்குமாத்திரம் புண்டரம் தரித்துவருவதினால் அவர்களுடைய உண்மையான மனச்சுபாவத்தைப் பார்ப்பவர்கள் தெரிந்துகொள்ளாமல் மோசம்போவார்கள்.

(தொடரும்)

ராவ்ஸாஹேப் எல். ஏ. ரேங்கசாமிஅய்யர்.

மதிப்புரை.

மதுரை வி. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரியார் பி.ஏ., பி.எல். அவர்களால் இயற்றப்பட்டதும், தமிழ் அர்த்தத்துடன் கூடியதுமான வடமொழியிலுள்ள ஸ்ரீ ஜகத்குருஸ்தவமாலை எனப்பெயர் வாய்ந்த நமது பார்வைக்கனுப்பிய ஒரு சிறந்த நூலைக் கண்ணுற்றோம். ஸம்ஸ்கிருத பாஷையில் பலவாறான நியமங்களைக் கொடுத்திருப்பதால் ஒரு விஷயத்தைப்பற்றிச் செய்யுளாக இயற்றுவது மிகவும் சிரமமேயாகும். சாஸ்திரங்களில் நன்கு பயிர்சிபெற்ற கல்விமான்களில் சிலர் சுலோகரூபமாய் ஒன்றைப்பற்றி எழுத முடியாமல் வருந்துகிறார்கள் என்பதும் வெளிப்படையே. கவிதை என்பது முற்பிறவியில் செய்த நற்கர்மத்தின் பயனாக ஏற்பட வேண்டுமேயன்றி நம்முடைய முயற்சியால் மாத்திரம் அடையக் கூடியதல்ல. இக்கருத்தையே,

कविताया विलासस्तु दिष्ट्या कापि प्रकाशते ।

"கவிதையினுடைய விலாஸமானது பகவானுடைய அனுக்கிரக விசேஷத்தால் சில விடத்தில் பிரகாசிக்கின்றது" என்று ஒரு பண்டிதசிகாமணி சாற்றுகின்றார். இவ்வித மஹிமைவாய்ந்த கவி

தையை பிர்மஸ்ரீ ராமஸ்வாமிசாஸ்திரியாரவர்கள் தமது புண்ணிய வசத்தாலடைந்து அந்த வாக்கையும் வீணான வேறு வழிகளில் செலவிடாது சாஸ்திரங்களின் கருத்திற்கிணங்க ஸ்ரீ ஜகத்குரு பரமாசார்யாளவர்களிடம ஸமர்ப்பித்து எழுதியிருக்கும் ஸரஸமான பதங்களுடனும், சிறந்த கருத்துடனும் கூடிய இந்த நூலை படிப்போர்களுக்கு அதிக ஆனந்தத்தை உண்டுபண்ணுமென்பது வெளிப்படையே. இதையியற்றியவர்களுக்கு ஆசார்யாளிடமிருக்கும் பக்தியின் வலிமையும் இவ்விதமென்று கூறவியலாது என்பதை இந்நூலிலுள்ள ஒரு செய்யுளே நன்குவெளியிடுகின்றது. அஃதாவது

कदाचाचार्याणां वदनकमलस्यन्दि सुवचो
मरन्दान्यास्वाद्य श्रवणपुटयुग्मेन नितराम् ।
अवाप्य स्वानन्दं गतविषयतृष्णः शुभमतिः
मितं चायुश्शेषं निमिषमिव नेष्यामि गतभीः ॥ என்பது

இதன் பொருள்.

'ஸ்ரீ ஜகத்குரு ஆசார்யாளுடைய முகமாகிற தாமரைமலரிலிருந்தும் பெருகும் பிறவிப்பிணியையகற்றிமோக்ஷமென்னும் பரம புருஷார்த்தத்தையளிக்கும் சக்திபொருந்தியசிறந்தஉபதேசங்களாகிய மகரந்தங்களை இரு செவிகளாலும் வேண்டியவரையில் நன்கு அருந்தி ஆத்மானந்தத்தைப்பெற்று விஷயங்களிலுள்ள பற்றுதலை அறவே யொழித்து அக்ஞானத்திலிருந்தும் விலகிய சுத்தமான புத்தியை யுடையவனுயும் சகலப்பிராணிகளுக்கும் இயற்கையாயுள்ள இந்த ஸம்ஸார துக்கத்தில் பயமற்றவனுயுமிருந்துகொண்டு சென்றதுபோக பாக்கியாயுள்ள எனது ஆயுளை நிமிஷகாலம்போல் போக்கும்படியான பாக்கியம் எனக்கு எப்பொழுது கிட்டும்' என்பது.

இதனுல் நமது ஆசார்யாளுக்கு ஜனங்களை உத்தாரணம் செய்யவேண்டிய விஷயத்தில் இயற்கையாயிருக்கும் கருணையும்

அவர்களுடைய உபதேச வாக்கிற்கு இருக்கும் மஹிமையும், தமக்கு ஆசார்யாளிடத்திலிருக்கும் பக்தியும் தற்காலமிருக்கும் ஸம்ஸார துக்கத்தை விலக்கி உத்தமமான ஆத்மானந்தத்தை படைவதே இம்மானிடப்பிறவிக்குப் பயன். அதனையும் ஸத்குருக்களுடைய உபதேசத்தால் தான் பெறவேண்டும் என்று சாஸ்திரங்கள் சாற்றுகின்றபடியால், அவ்வித உபதேசத்தை 'நமது பரமாசார்யாளுடைய அனுக்கிரகத்தால் பெற்று துறவியாய் ஸ்வரூபானந்தத்தில் லயத்தையடைந்து எப்பொழுது சுகித்திருப்பேன் என்று மிகவும் தாபத்துடன் கூடிய மனத்தையுடைய இக்கவிதாம் நல்வழியில் செல்லமுயலுவதோடு பிறருக்கும் உத்தம கதியை யடைவதற்குறிய நெறியை அறிவிக்கிறார். இவ்விதமே இக்கவி வாழ்நாட்கள் பூராவும் தமது வாக்கை நல்விஷயங்களில் உபயோகப்படுத்தித்தாமும் தன்யராகி மற்று முள்ளவர்களுக்கும் விசேஷஆனந்தத்தை உண்டுபண்ணும்படி அனுக்கிரகிக்கவேண்டி ஸ்ரீ மதாசார்யாளையும், ஸ்ரீசந்திரமௌளீசுவரரையும் வேண்டுகிறோம்.

குரோதனவருஷத்திய ஆனந்தபோதினிசுத்த திருக்கணித பஞ்சாங்கம்.

சென்னை ஆனந்தபோதினிஆபீஸ் மானேஜர் அவர்களால் அனுப்பப்பட்ட மேற்கண்ட பெயர்வாய்ந்த பஞ்சாங்கம் ஒன்று நமக்குக்கிடைத்தது. இது 64 பக்கங்களுடன் புஸ்தகரூபமாய்ப் பார்வைக்கும் அழகாயிருக்கிறது. இதில் லோகோபகாரத்தின் பொருட்டுச் சிரமப்பட்டுப் பலவிஷயங்களை வெளியிட்டிருக்கிறார். அவரவர்களும் அனுஷ்டிக்கவேண்டிய எவ்வித கர்மானுஷ்டானங்களும் ஜோஸியரை எதிர்பாராமல்தாமே தெரிந்து கொள்ளும்படி விஸ்தாரமாய் ஜோஸியவிஷயமாயுள்ள அவசியமான பாகங்களையும் வெளியிட்டிருக்கிறார். அதன்கிரயம் இரண்டணா.

ஆர்யதர்மம் உபபத்திராதிபர்.

வைக்கமும் ஈழுவர்களும்.

(176-வது பக்கத்தொடர்ச்சி)

திருவனந்தபுரத்தில் திவான் அவர்கள் ஈழுவர்களைப் பொது ரஸ்தாவில் போகச்செய்யவேண்டுமென்பதை நான் ஒப்புக்கொள்கிறேன் என்று சொல்லிவிட்டார்கள் என்று மித்திரன் வீசுகிறது. அவர்கள் அம்மட்டோடு வார்த்தையை நிறுத்தவில்லை. ஆனால், மற்ற வகுப்பினரது மத உணர்ச்சியை மதியாமலும் நெடுநாளாக இருந்துவரும் சட்டரீதியான நிலைமையை மீறி நடப்பதாயும் உள்ள ஒரு கார்யத்தை ஒரு கவர்ன்மெண்ட் மதிக்கமுடியுமா வென்று கேட்கிறேன்'' என்றும் திவான் கூறியதாய் 15–3–25-ல் மித்திரனே கூறியிருக்கிறது. இதனால் திவானுக்கு வேதசாஸ்திர ஸம்மதமான அனாதி பரம்பரா வழக்கத்தை மீற நாமில்லையென்று ஏற்றுக்கொண்டதாய் ஆகவில்லையா? இதையெல்லாம் எழுதிவிட்டு அப் பத்திரிகை இந்தக் கேள்வியையும் கேட்கிறது. அதாவது, ஈழுவர்கள் இந்துக்கள் என்ற முறையில் கிறிஸ்தவர்கள், மகம்மதியரைக்காட்டிலும் பாத்யமற்றவர்களா? வழக்கம் என்பது சரியான பதிலல்ல. எத்துணையோ வழக்கங்கள் போனவழியில் இந்தவழக்கமும் போகக்கூடாதென்பதற்குக் காரணமென்ன என்பதே இதற்குப் பதில் நம் ஆர்யதர்மத்தில் முன்னமே கூறியிருக்கிறேன். ஆகையால் மீண்டும் அதை இங்கு விரிக்கவில்லை. ஈழுவர்களான நம் ஸகோதரர்களை நாம் சொல்லவும் அவர்கள் கேட்கவும் கடமைப்பட்டிருப்பதால் நாம் சொல்கிறோம். மீறினால் தடுக்கிறோம். இதனால் ஈழுவர்களுக்கு இழிவல்ல. தேகத்தை உத்தேசித்து நமதுவீட்டில் வீட்டுக்காகாத பிரியமான தாய், சகோதரி, பாரியை முதலியவர்களை விலக்கி வைத்தபோதிலும் அவர்களிடத்தில் அன்பு காட்டுவதுபோல் ஈழுவர்களையும் ஸகோதர பாவத்துடனேயே பார்த்து, அப்பா நீ இங்கு வராதே. சாஸ்திரம் உன் கன்மதேகத்தை ஒதுங்கிநிற்கச் சொல்கிறது. நீ அவ்விதம் சாஸ்திர ரூபமான பகவானது வார்த்தைப்படி நடந்தால் உனக்குப் பகவான் எங்களுக்குக் கொடுக்கும் புண்யலோ

கத்தையே அளிப்பார் என்கிறோம். இதில் என்ன கேடு வருகிறது. பிராமணனுக்குத்தான் மோக்ஷம், மற்றவர்க்கில்லையென்று சாஸ்திரத்தில் எங்கேயாவதுளதா இல்லை இல்லை. ஆகவே ஈழுவர்கள் கிறிஸ்தவர் மகம்மதியர்களைக் காட்டிலும் மேம்பட்டவர்களே. அடுத்து வழக்கம் என்பது சரியான பதில் அல்ல. எத்துணையோ வழக்கங்கள் போன வழியில் இந்த வழக்கமும் போகக்கூடாதாவென்கிறார். இதற்குத் தனியாய் பதில்வேண்டாம். ஆயினும் சொல்கிறேன். வழக்கம் என்பது சரியான பதில் தான். வழக்கத்தை விட்டால் துர்வழக்கம் வரும். துர்வழக்கம் இருந்தால்மட்டிலும் அவசியம் அதை விலக்க வழி தேடவேண்டும். இல்லாவிடில் அனர்த்தமே. இந்த வழக்கத்தை விட்டால் நமது மதத்தை மீறின பாபமே நேரிடும். எத்துணையோ கெட்டவழக்கம் போனவழியில் இது போகவேண்டாம். நல் வழக்கங்கள் போய் இருந்தால் அவைகளைத் திரும்ப அழைத்துக் கையாளுவதே ஆஸ்திகர்கட்குச் சிறந்த ஓர் மகிமை. ஆகவே இவ் விஷயங்களை நன்கு ஆராய்ந்து, இவ் விஷயத்தில் ஆஸ்திகர்கள் தலையிடாமல் தேச முன்னேற்றத்திற்கு இதுதான் பெரிய தடைக்கல் என்று எண்ணுவதுடன் வர்ணாசிரம தர்மத்தை நிலைநிறுத்தினல்தான் உடனே உலகம் விரோதமின்றி ஆதிகாலம்போல் வளரும் என்றும், அதை முன்னேற்றப் பண்டிதர்களின் உதவி ஆவசியகம் என்றும் தெரிந்துகொள்ளும்படி முன்னேற்றக்காரர்களுக்குத்தெரிவித்துக்கொள்கிறேன். சுதேசமித்திரன் எப்போதும் காந்தியவர்களையே பின்தொடர்ந்ததால் அவர்கள் வாக்குத்தான் வேதமென்றும், அவர்கள் சொல்வதுதான் தர்மம் என்றும் அவர்களே உலகமென்றும் ஏற்பட்ட பக்திமேலீட்டால் நமது வைதிகர்களைப் பிடிவாதக்காரர்களென்றும், முறண்டு உள்ளவர்களென்றும் பலவாறு பலதடவை எழுதிவருவதற்கு ஆதாரமே இல்லை. உண்மையில் வைக்கத்தில் ஸத்யாக்கிரகம் செய்பவர்கள்தான் பிடிவாதக்காரர்கள். அவர்கள்தான் முறட்டுச் செயலுள்ளவர்கள்.

பாருங்கள் வெகுகாலமாய் நடக்கும் முறையை அடியோடழித்துவிடுவதற்காக அங்குபோய்ப் பிடிவாதம் செய்கின்றனர். தர்மராஜாங்கத்தார் அப்படிச்செய்வது தவறு என்று புத்திமதி

சொன்னால் கேட்கும் ஸ்வபாவமுடையவர்களல்லவென்று கொண்டு இரவும் பகலும் அங்கு ரக்ஷணைசெய்து அனாதியான தர்ம சேதுவை மீராமலிருக்கச செய்கின்றனர். நியாயமாய்ப் போக வேண்டுமானால் ராஜாங்கத்தாரையும் மதவிஷயமாய் சாஸ்திரங்களைப் படித்திருக்கிற பண்டிதரையும் கண்டு கேட்டு சங்கையை யகற்றிக்கொண்டல்லவா செய்யவேண்டும். மீண்டும் சொல்வானேன் ஒருபோதும் நமது வேதசாஸ்திரங்கள் ஒருகாலத்தை உத்தேசித்து மட்டிலும் வந்ததல்ல. எத்துணையோ ஆயிரக்கணக்கான யுகங்கள் கழிந்தன. இப்போது இது 28-வது கலியுகம் என்று தினமும் முழுகும்போதும் கன்மாக்களின் ஆரம்பகாலத்திலும் யாம் ஸங்கல்பம் செய்துகொண்டிருக்கிறோம். கிருதயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகமென்ற நான்கும் 1000 தடவை வந்தால் அது பிர்மாவுக்கு ஒரு பகலாம். அவ்வளவு காலம் பிர்மாவுக்கு இரவும் உண்டு. இரவு துயிலின்காலமாதல்பற்றி அக்காலங்களில் பிர்மா நித்திரைசெய்தால் அப்போது உலகம் சிருஷ்டியில்லாமலே ஏதோ ஒரு மாதிரியாயிருக்கும். பிறகு விடியவும் சிருஷ்டி. இப்படி ஒருநாள். இம்மாதிரி 360 நாள் ஏற்பட்டு ஒரு வருஷம். இவ்விதம் பிர்மனுக்கு 100 வயதாகவேண்டும். அப்புறம் அவர் காலமாய் மறு பிர்மன் வருவார். இவ்விதம் எத்துணையோ பிர்மன் போய்விட்டான். ஆகவே இப்படி மனதிற்கெட்டாத காலங்கள் போய்விட்டனவென்று தெளிவாய்க்கூறும் நம் சாஸ்திரங்கள் வேதசாஸ்திரங்கள்தோறும் புதிதென்று சொல்லவில்லை. யுகத்தின் ஆரம்பத்தில் பிர்மா தோன்றியதும் அவனுக்குப் பரமாத்மா வேதங்களைத் தோன்றச்செய்கிறானென்றும் வேதங்களைக் கேட்டதும் அதன்படி உலகத்தை சிருஷ்டிக்கிறானென்பதுமே நம் கொள்கை. ஆதல்பற்றியே வேதங்களை நாம் சுருதியென்போம். கேட்கப்படுகை என்பது அதன் பொருள். இப்படி எல்லாம் தத்துவமிருக்க வேதத்தைப் பார்த்து உலகம் சிருஷ்டிக்கப் படுவதுபோய் உலகத்திற்குத் தகுந்தபடியும் காலத்திற்குத் தகுந்தபடியும் வேதம் திருத்தப்படவேண்டுமாம்.

(தொடரும்)

எம். என். சுப்ரமண்யசாஸ்திரிகள்.